பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

03 10 2026 06 45

சனிக்கிழமை காலை

வணக்கம் - மாநில செய்திகள் வாசிப்பவர் - ஜமீர் அக்தர்

தலைப்புச் செய்திகள்

1. உலக வர்த்தக அமைப்பின் விதிமுறைகளுக்கு ஏற்ப நாடுகளுக்கிடையேயான வர்த்தக நடவடிக்கைகள் உறுதி செய்யப்பட வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் வலியுறுத்தியுள்ளார்.

2. நாடு சுதந்திரம் அடைந்து நூறு ஆண்டுகள் நிறைவடையும் போது, இந்தியா வல்லரசு நாடாகத் திகழும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

3. பண்டிகைகாலத்தையொட்டி ஆம்னி பேருந்துகளில் அதிக கட்டணம் வசூலிப்பதை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில அரசு கூறியுள்ளது.

4. விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த மாநில அரசு தவறிவிட்டதாக அஇஅதிமுக குற்றம்சாட்டியுள்ளது.

5. Dutch ஓபன் பாட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Aakarshi Kashyap, காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

---- இனி விரிவான செய்திகள் ----

<><><><><><>

உலக வர்த்தக அமைப்பின் விதிமுறைகளுக்கு ஏற்ப நாடுகளுக்கிடையேயான வர்த்தக நடவடிக்கைகள் உறுதி செய்யப்பட வேண்டும் மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்காவில் நடைபெற்ற ஜி-20 வர்த்தக அமைச்சர்களின் மாநாட்டின் நிறைவு நாள் நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், இதனை தெரிவித்தார்.

ஜி-20 உறுப்பு நாடுகளுடனான இந்தியாவின் வர்த்தகம் வெளிப்படையாகவும், சர்வதேச விதிகளின் அடிப்படையிலும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

புவிசார் அடிப்படையிலான உற்பத்தி, மறைமுக மானியம் வழங்குவது போன்ற சில நாடுகளின் செயல்பாடுகள் சர்வதேச வர்த்தகத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் என்று அவர் தெரிவித்தார்.

உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்வதுடன் உலகளவிலான வர்த்தக நடைமுறைகளிலும் இந்தியா கவனம் செலுத்தி வருவதாக திரு. பியூஷ் கோயல் குறிப்பிட்டார்.

<><><><><><>

நாடு சுதந்திரம் அடைந்து நூறு ஆண்டுகள் நிறைவைக் கொண்டாடும் போது, இந்தியா வல்லரசு நாடாகத் திகழும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரத்தில் நடைபெற்ற அசோக் சிங்கல் நூற்றாண்டு விழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் இவ்வாறு கூறினார்.

<><><><><><>

பண்டிகை கால விடுமுறையையொட்டி ஆம்னி பேருந்துகளில் அதிக கட்டணம் வசூலிப்பதை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

ஆம்னி பேருந்துகளில் வழக்கத்திற்கு மாறாக கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுவதாக பெறப்பட்ட புகார்களை தொடர்ந்து வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர்கள் அடங்கிய குழு அமைக்கப்பட்டு தீவிர சோதனை நடத்தப்பட்டு வருவதாக மாநில அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூடுதல் கட்டணம் உள்ளிட்ட விதிமீறல்களை கட்டுப்படுத்தும் வகையில் சிறப்பு வாகன தணிக்கை இம்மாதம் 21ஆம் தேதிவரை தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று அந்த செய்திக்குறிப்பு மேலும் தெரிவிக்கிறது.

விதிமுறைகளை மீறி கூடுதல் கட்டணம் வசூலிக்கும் ஆம்னி பேருந்துகளுக்கு அபராதம் விதிக்கப்படும் என்றும், தொடர்ந்து விதிமீறல்களில் ஈடுபடும் ஆம்னி பேருந்துகளின் அனுமதியை ரத்து செய்வது உள்ளிட்ட கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் மாநில அரசு தெரிவித்துள்ளது.

<><><><><><>

கிராமப்புறங்களில் அடிப்படை தேவைகளை நிறைவேற்றும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மாநில சமூக நீதித் துறை அமைச்சர் திரு. வன்னி அரசு தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டம் மரக்காணத்தில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் கலந்துகொண்டு மக்களின் குறைகளை கேட்டறிந்தார்.

கிராமங்களின் வளர்ச்சியே நாட்டின் வளர்ச்சி என்ற மகாத்மா காந்தியின் கனவை நனவாக்கும் வகையில், ஊரக மேம்பாட்டிற்கு

மாநில அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக அவர் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் சமூக நீதி விடுதிகளில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கு சமையற்கலைஞர் பதவி உயர்வுக்கான ஆணைகளை அமைச்சர் வழங்கினார்.

<><><><><><>

விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த மாநில அரசு தவறிவிட்டதாக அஇஅதிமுக குற்றம்சாட்டியுள்ளது.

தாராபுரத்தில் சட்டப்பேரவை இடைத்தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசிய அக்கட்சியின் பொதுச் செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி, தேர்தல் சமயத்தில் அளித்த வாக்குறுதிகளை த.வெ.க. அரசு நிறைவேற்றவில்லை என்று குறைகூறினார்.

அஇஅதிமுக ஆட்சிக்காலத்தில், திறம்பட மேற்கொள்ளப்பட்ட பல்வேறு திட்டங்களை அவர் பட்டியலிட்டார்.

மின்வெட்டு காரணமாக மக்கள் மற்றும் தொழில் நிறுவனங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதை திரு. எடப்பாடி பழனிசாமி சுட்டிக்காட்டினார்.

<><><><><><>

செயல் திறனற்ற நிர்வாகம் காரணமாக மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக பி.ஜே.பி. மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

திருப்பூர் மாவட்டம் அனுப்பர்பாளையத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய அவர், பிற மாநிலங்களில் ஜி.எஸ்.டி. வசூல் அதிகரித்துள்ள நிலையில், தமிழகத்தின் தொழில்துறை வளர்ச்சி சரிவடைந்து வருவதாக கூறினார்.

டாஸ்மாக், பத்திரப்பதிவு, நகராட்சி என பல்வேறு துறைகளிலும் முறைகேடுகள் அதிகரித்து வருவதாக அவர் குற்றம்சாட்டினார்.

கொலைகள், பாலியல் வன்கொடுமை, போன்ற குற்றச்செயல்கள் அதிகரித்து வருவது மாநிலத்தின் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்துள்ளதை எடுத்துக்காட்டுவதாக உள்ளது என்று திரு. நயினார் நாகேந்திரன் கூறினார்.

<><><><><><>

தென்காசி மாவட்டம் ஆலங்குளம் அருகே கல்லூத்து கிராமத்தைச் சேர்ந்த தடகள வீராங்கனை அபிநயா, ஆசிய விளையாட்டுப் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்று நாட்டிற்கும், தமிழகத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர், தனது குடும்பத்தினரும், பயிற்சியாளரும் அளித்த ஊக்கம் காரணமாக, இந்த வெற்றி கிடைத்துள்ளதாகக் கூறினார்.

<><><><><><>

தமிழகத்தில் நீலகிரி, கோவை, திண்டுக்கல், தேனி ஆகிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் அடுத்த மூன்று தினங்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் மதுரை, தூத்துக்குடி, ராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை, திருச்சி, அரியலூர் பெரம்பலூர், சேலம், ஈரோடு, நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் ஒருசில பகுதிகளில் மிதமான மழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில், இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

<><><><><><>

கருத்து வேறுபாடுகளுக்கு தீர்வுகாணும் வகையில், பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் திரு. இம்ரான்கான் கட்சியுடன் இன்று அந்நாட்டு அரசு பேச்சுவார்த்தை நடத்துகிறது.

<><><><><><>

மத்திய ஆப்பிரிக்க நாடான காங்கோவில், எபோலா வைரஸ் தொற்று பாதிப்பு காரணமாக, 4,018 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

<><><><><><>

நாட்டின் அன்னியச் செலாவணி கையிருப்பு 747 புள்ளி 5 பில்லியன் அமெரிக்க டாலராக உள்ளது.

<><><><><><>

இந்தியா - நெதர்லாந்து இடையே வேளாண் மற்றும் தோட்டக்கலைத் துறையில், 25 சீர்மிகு மையங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<><><><><><>

இளைஞர்களிடையே தேசிய ஒருமைப்பாடு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், ஒரே பாரதம் உன்னத பாரதம் என்ற திட்டத்தின் கீழ், இளையோர் சங்கத்தின் விழிப்புணர்வு சுற்றுப்பயணம் ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூர் சென்றடைந்தது.

<><><><><><>

சட்டவிரோத விற்பனைக்காக கடத்தப்பட இருந்த யானைத் தந்தம் உட்பட நான்கு வனவிலங்குப் பொருட்களை வருவாய்ப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

<><><><><><>

தருமபுரி மாவட்டத்தில் தீபாவளி பண்டிகையொட்டி சிறப்பு கதர் விற்பனையை ஆட்சியர் திரு. சரவணன் தொடங்கி வைத்தார்.

<><><><><><>

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி ராஜகோபாலசுவாமி திருக்கோயிலில், புரட்டாசி மாதம் சனிக்கிழமையையொட்டி நடைபெற்ற சிறப்பு பூஜையில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

<><><><><><>

நீலகிரி மாவட்டத்தில் தேயிலைக்கான குறைந்தபட்ச ஆதார விலையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய மாநில அரசுகளுக்கு சிறுகுறு விவசாய சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

<><><><><><>

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி சிப்காட் அருகே ஒன்றரை கிலோ போதைப்பொருளை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.

<><><><><><>

Dutch ஓபன் பாட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Aakarshi Kashyap, காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில், அவர் 21-11, 21-7, என்ற செட் கணக்கில், ஸ்விட்சர்லாந்தின் Azkya Aliefa Ruhanda-வை வென்றார்.

----------

ஆசிய விளையாட்டுப் போட்டியில், ஆடவர் டுவென்ட்டி - டுவென்ட்டி கிரிக்கெட் போட்டி இறுதியாட்டத்தில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

ஜப்பானில் நடைபெறும் இப்போட்டி காலை 10.00 மணிக்குத் தொடங்குகிறது.

--------------

இந்தியா - வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கிடையேயான மூன்றாவது மற்றும் இறுதி ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

நியூ சண்டிகரில் இப்போட்டி, பிற்பகல் 2.00 மணிக்குத் தொடங்குகிறது.